**வேலூர் விற்பனைக்குழு செயலாளர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்:– திரு.எஸ்.எஸ்.ராம்குமார், பிஎஸ்சி(விவ),**

ந.க.எண்:ஆ/1424/2019

நாள்: 10.11.2020

பொருள்: பணிக்குழு – நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலூர் விற்பனைக்குழு வேலூர் – திரு.பி.சக்திவேல் அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 4 (2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018) தேர்வு செய்யப்பட்டது – வேலூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்தது – பணிவரன்முறை செய்து ஆணைப்பிறப்பித்தல் – சார்பாக.

பார்வை: 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 கடிதம் எண்–1187/பிஎஸ்டி–எச்1/2019, நாள்–18.02.2019.

2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை எண் நாள்–01.03.2019

####

ஆணை:–

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பட்ட தொகுதி 4 (2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018)–ன் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பதவிக்கான எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்ட திரு.பி.சக்திவேல் அவர்கள் பார்வை 1–ல் காணும் கடிதம் மூலம் வேலூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார்.

பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் மூலம் அரக்கோணம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட இளநிலை உதவியாளர் பணியிடத்தில் நியமிக்கப்பட்டார். இவர் மேற்படி பணியிடத்தில் 07.03.2019 மு.ப பணியில் இணைந்ததைத் தொடர்ந்து, இவரது பணியினை அவர் பணியில் இணைந்த நாளிலிருந்து கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்தும், இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | தகுதிகாண் பருவக்காலத்தில் வைக்கப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.பி.சக்திவேல், இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அரக்கோணம் (மா.ப) வேலூர் | 07.03.2019 மு.ப | 07.03.2019 மு.ப | 07.03.2019 மு.ப |

..2..

மேற்படி தகுதிகாண் பருவகாலத்தில் இவர் கீழ்க்காணும் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

1. வேளாண்மை விற்பனைத் துறை தேர்வு
2. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. அரசு அலுவலர்களுக்கான பவானி சாகர் அடிப்படை பயிற்சி.

இப்பணிவரன்முறையானது தொகுதி 4–ன் கீழ்வரும் (2015–2016இ 2016–2017 மற்றும் 2017–2018) ஆண்டிற்கான பணிநியமனங்கள் குறித்த, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது என அறிவிக்கப்படுகிறது.

இப்பணிவரன்முறை செய்த ஆணையினைப் பெற்றுக் கொண்டமைக்கான உரிய ஒப்புதலை தலைமையலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

செயலாளர்,
வேலூர் விற்பனைக்குழு, வேலூர்.

பெறுநர்:–
சம்பந்தப்பட்ட பணியாளர்(உரிய வழிமுறையாக).
நகல்–1. கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வேலூர்
2. இளநிலை உதவியாளர் 'அ1' பிரிவு (2)
3. மேற்பார்வையாளர் ஆ பணிப்பதிவேடு
உ.திரி–1